DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 243/2024

Prosecution Witness - P.W. 17

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. காளியப்பன் |
| Father's Name | : | பொன்இசக்கி |
| Village | : | கொக்கராயன் பேட்டை |
| Taluk | : | பன்னிபாளையம் |
| Calling | : | இன்ஸ்பெக்டர் |
| Age | : | 58 |
| Date | : | 18.02.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.02.2026.

(எதிாி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

18.02.2026

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், கொக்கராயன்பேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் களியக்காவிளை காவல் நிலைய வட்ட காவல் ஆய்வாளராக 26.11.2023 ஆம் தேதி பணியில் இருந்தபோது போன் மூலம் கிடைத்த தகவல்படி பளுகல் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு. முத்துகுமரன் என்பவரால் பதிவு செய்யப்பட்ட பளுகல் காவல் நிலைய குற்ற எண். 94/2023 சட்டபிரிவுகள் 302, 380 இ.த.ச. வழக்கில் முதல் தகவல் அறிக்கை நகல்

அன்றைய தினம் 16.30 மணிக்கு பளுகல் காவல் நிலையத்தில் வைத்து பெற்றேன். சம்பவ இடத்தை 17.00 மணிக்கு சாட்சிகள் வில்சன் மற்றும் அருள்ராஜ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் தயார் செய்த மாதிரி வரைபடம். **அது அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் தயார் செய்த பார்வை மகஜர். அது ஏற்கனவே அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எனது தகவல்படி சம்பவ இடத்திற்கு விரல் ரேகை உதவி ஆய்வாளர் திரு. ஜவஹர், திருமதி. அமலா ஆகியோரும் வந்து விரல் ரேகைகள் ஆய்வு செய்தார்கள். அதை தொடர்ந்து துப்பறியும் நாய் பிரிவு பொறுப்பாளர், சிறப்பு உதவி ஆய்வாளர் 869 திரு. விஜயேந்திரன் அவர்கள் தலைமையில் துப்பறியும் நாய் வரவழைக்கப்பட்டு சம்பவ இடத்தில் மோப்பம் பிடித்து, ஆய்வு செய்யப்பட்டது.

தடய அறிவியல் துறை அலுவலர் திருமதி. மினிதா சம்பவ இடத்தில் இரத்த கறைகள் மற்றும் தடயங்களை ஆய்வு செய்து இரத்த மாதிரிகளை சேகரித்தார். 18.00 மணிக்கு சம்பவ இடத்தில் திரு. வில்சன் மற்றும் திரு. அருள்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட பொருள்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன்.

1. சுமார் 28 செ.மீ. நீளமுள்ள இரும்பு கைப்பிடி கொண்ட இரத்தக் கறை படிந்த ஆணிபிடுங்கும் இரும்பு சுத்தியல் ஒன்று.

2. சுமார் 2 அடி நீளமுள்ள சுமார் ½ செ.மீ. விட்டம் கொண்ட உடைந்த இரும்பு பைப் துண்டு ஒன்று.

3. இரத்தக்கறை படிந்த வெள்ளை கறையுடைய நீல நிற லுங்கி ஒன்று.

4. வெள்ளை நிற இரத்தக் கறை படிந்த வேஷ்டி ஒன்று.

5. இரத்தக் கறை படிந்த சாம்பல நிற முழுக்கை சட்டை ஒன்று.

6. விஷம் கலந்த வாடையுடன் கூடிய சிறிதளவு மதுவுடன் கூடிய 180 மில்லி அளவுள்ள MGM மதுபாட்டில் ஒன்று.

7. சிகரெட் லைட்டர் ஒன்று.

8. Gold vimal Indie Mint என எழுதப்பட்ட சிகரெட் பாக்கெட் ஒன்று.

9. டிவி ரிமோட் ஒன்று.

10. அடர் சாம்பல் நிறமுடைய கையுறை ஒன்று.

11. சம்பவ இடத்திலிருந்து உடைத்து எடுக்கப்பட்ட இரத்தக்கறை படிந்த சிமெண்ட் தரை மண் கொஞ்சம்.

12. சம்பவ இடத்திலிருந்து உடைத்து எடுக்கப்பட்ட இரத்தக்கறை படியாத சிமெண்ட் தரை மண் கொஞ்சம்.

13. தடய அறிவியல் துறை ஆய்வாளரால் சம்பவ இடத்திலிருந்து காட்டன் பஞ்சில் எடுக்கப்பட்ட இரத்த மாதிரி கொஞ்சம்.

14. தடய அறிவியல் துறை ஆய்வாளரால் சம்பவ இடத்தின் பக்கத்து அறையிலிருந்து காட்டன் பஞ்சில் எடுக்கப்பட்ட இரத்த மாதிரி கொஞ்சம்.

என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 6 அத்தாட்சி அப்போது என்னால் தயார்

செய்யப்பட்டதுதான். கைப்பற்றப்பட்ட பொருள்களை தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 9 ஆணி பிடுங்கும் சுத்தியல், சா.பொ. 10 இரும்பு பைப் துண்டு, சா.பொ. 11 நீல நிற லுங்கி, சா.பொ. 12 சாம்பல் நிற முழுக்கை சட்டை, சா.பொ. 13 வெள்ளை நிற இரத்தக்கறை படிந்த வேஷ்டி, சா.பொ. 14 Gold vimal Indie Mint, சா.பொ. 15 MGM மது பாட்டில், சா.பொ. 16 சிகரெட் லைட், சா.பொ. 17 டிவி ரிமோட், சா.பொ. 19 இரத்தக் கறை படிந்த சிமெண்ட் தரை துண்டு, சா.பொ. 20 இரத்தக் கறை படியாத சிமெண்ட் தரை துண்டு, சா.பொ. 21 கையுறை ஆகியவை அப்போது என்னால் கைப்பற்றப்பட்டதுதான்.

சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் வில்சன், அருள்ராஜ், ஜெயராணி, ஜெகன் ஜேம்ஸ், விஜயன், அருள்ஜோஸ், சுதிர் மற்றும் உதவி ஆய்வாளர் முத்துகுமரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு சென்றபோது அந்த வீடு பூட்டு போட்டு பூட்டியிருந்தது. புகார்தாரர் ஜெயராணி வீட்டை திறந்துவிட்டார்.

27.11.2023 ஆம் தேதி காலை 7.00 மணிக்கு இவ்வழக்கில் இறந்துபோன ஜேம்ஸ் என்பவரின் உடல் மீது நாகர்கோவில் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைத்து, பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். சாட்சிகள் அருள்வினு மற்றும் பிரின்ஸ் ஆகியோர்கள் உடன் இருந்தனர். **அப்போது நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். அது அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பிரேத பரிசோதனைக்காக மருத்துவரின் கருத்துரையை கேட்டு,

அ.சா.ஆ. 7 வேண்டுகோள் விண்ணப்பத்தை தலைமை காவலர் 1656 திரு. கிளாஸ்டின் ஜெயகுமார் ஆகியோர் மூலம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பிரேத பரிசோதனை முடிந்து, பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட வெள்ளை மற்றும் கருநீல நிற சிறு சிறு கட்டங்கள் போட்ட இரத்தக் கறை படிந்த லுங்கியையும், பிரேதத்தின் உள்ளுறுப்புகளையும் மாதிரிகள் எடுத்து பிரேத பாதுகாப்பு அலுவலில் இருந்த தலைமை காவலர் 1656 திரு.கிளாஸ்டின் ஜெயகுமார் என்பவரிடம் ஒப்படைத்ததை படிவம் 95 ல் நான் கைப்பற்றினேன். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 18 லுங்கி அப்படி என்னால் கைப்பற்றப்பட்டதுதான்.

எனக்கு கிடைத்த தகவல்படி அன்றைய தினம் 14.00 மணிக்கு இந்த வழக்கின் எதிரியான ஆஜரில் உள்ள அருள்சுரேஷ் என்பவரை அவருடைய வீட்டில் வைத்து சாட்சிகளான அருள் வர்க்கீஸ் மற்றும் தாஸ் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து எந்தவித ஆசைவார்த்தையோ, துன்புறுத்தலோ இல்லாமல் தாமாக முன்வந்து அதே இடத்தில் வைத்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை லேப்டாப்பில் பதிவு செய்தேன், என்னுடைய டிரைவர் போலீஸ் மூலமாக அதை பென்டிரைவில் எடுத்து அருகே இருந்த கம்ப்யூட்டர் சென்டரில் பிரிண்ட் அவுட் எடுத்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியும், மேற்சொன்ன சாட்சிகளும் கையொப்பம் செய்தார்கள்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பணத்தையும், இரத்தக்கறை படிந்த உடைகளையும், வீட்டில் வைத்துள்ளதாக சொன்னார். நகைகளை அளப்பங்கோடு

ஈஸ்வர கால பூதத்தான் கோவில் பக்கம் உள்ள ரப்பர் தோட்டத்தில் வைத்திருப்பதாகவும், அதை எடுத்து ஆஜர் படுத்துவதாகவும் சொன்னார். வீட்டில் வைத்திருந்த இரத்தக்கறை படிந்த பிங் கலர் சட்டையையும், இரத்தக்கறை படிந்திருந்த கருநீல கலர் ஜீன்ஸ் பேண்ட் ஆகியவற்றையும், 62 எண்ணம் ரூபாய் 500 நோட்டுக்கள் மற்றும் 3 எண்ணம் ரூபாய் 200 நோட்டுக்கள் மற்றும் 1 எண்ணம் ரூபாய் 100 என மொத்தம் ரூபாய் 31,700/- பணத்தையும், சுமார் 107 செ.மீ. நீளம் உள்ள மஞ்சள் சிகப்பு கோடு போட்ட நைலான் கயிற்றின் துண்டு ஒன்று, TN 75 R 0475 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் டிஸ்கவரி இருசக்கர வாகனம் அதன் இன்ஜின் நம்பர் JEZWDE79217, Chassis No. MD2A52CZIDWE19938 ஆகியவற்றை அத்தாட்சி தயார் செய்து சாட்சிகள் அருள் வர்க்கீஸ் மற்றும் தாஸ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றினேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 3 அத்தாட்சி அப்போது என்னால் தயார் செய்யப்பட்டதுதான்.

என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 இரத்தக்கறை படிந்த சட்டை மற்றும் சா.பொ. 2 இரத்தக்கறை படிந்த ஜீன்ஸ் பேண்ட ஆகியவை அப்போது என்னால் கைப்பற்றப்பட்டதுதான். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 7 வரிசை ரொக்கம் அப்போது என்னால் கைப்பற்றப்பட்ட பணம்தான் (அ.சா. 1 ஜெயராணி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி ஏற்கனவே அவர் நீதிமன்றத்திலிருந்து பெற்றுச் சென்ற அந்த ரூபாய் நோட்டுக்களை ஆஜர் செய்ய அதை காட்டி சாட்சியிடம் கேட்டபோது அவ்வாறு அடையாளம் காட்டினார்). சா.பொ. 8 நைலான் கயிறு அப்போது கைப்பற்றப்பட்டதுதான். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 22 இருசக்கர வாகனம்

என்னால் அப்போது கைப்பற்றப்பட்டதுதான்.

அதன்பிறகு அளப்பங்கோடு ஈஸ்வர கால பூதத்தான் கோவில் பக்கம் உள்ள இரப்பர் தோட்டத்திற்கு எதிரி அடையாளம் காட்ட நானும், அதே சாட்சிகள் அருள் வர்க்கீஸும் தாஸும் சென்றோம். 16.00 மணிக்கு இரப்பர் தோட்டத்தில் நிலத்தில் புதைத்து வைத்திருந்த சிறிய பிளாஸ்டிக் டப்பாவை எடுத்து அதில் சுமார் 39.7 கிராம் எடை கொண்ட குருசு போட்ட தங்க செயின் ஒன்று. மொத்தம் 19.3 கிராம் எடை கொண்ட தங்க மோதிரங்கள் மூன்று ஆகியவற்றை எடுத்து ஆஜர் படுத்தினார். அவற்றை நான் அத்தாட்சி தயார் செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 4 அத்தாட்சி அப்போது நான் தயார் செய்தததுதான். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 3, 4, 5, மற்றும் 6 குருசு போட்ட தங்க செயினும், தங்க மோதிரங்களும் அப்போது கைப்பற்றப்பட்டதுதான். (அ.சா. 1 ஜெயராணி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி ஏற்கனவே அவர் நீதிமன்றத்திலிருந்து பெற்றுச் சென்ற அந்த நகைகளை ஆஜர் செய்ய அதை காட்டி சாட்சியிடம் கேட்டபோது அவ்வாறு அடையாளம் காட்டினார்). என்னிடம் காட்டப்படும் சா.பொ. 23 பிளாஸ்டிக் டப்பா அப்போது கைப்பற்றப்பட்டதுதான். சாட்சிகள் அருள்வர்க்கீஸ்ஸையும், தாஸையும் அதே இடத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

எதிரி மற்றும் சொத்துக்களுடன் 17.00 மணிக்கு நிலையம் வந்து, எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதற்கு முன்பு மாலை 6.00 அல்லது 6.15 மணிக்கு புகார்தாரர் ஜெயராணி, அவருடைய மகன் ஜெகன்ஜேம்ஸ் ஆகியோர் நான்

தகவல் சொல்லி காவல் நிலையம் வந்தார்கள். எதிரியையும், மேற்சொன்ன தங்க நகைகளையும் அடையாளம் காட்டினார்கள். 28.11.2023 அன்று படிவம் 95 மூலம் வழக்குச் சொத்துக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். என்னுடைய விசாரணையில் அந்த ரப்பர் தோட்டத்தை ஆஜர் எதிரி சுனிதா என்பவரிடமிருந்து குத்தகைக்கு எடுத்திருப்பதாகவும், உரக்கடை வைத்திருந்த நடராஜன் என்பவரிடம் ஆஜர் எதிரி விஷ மருந்து வாங்கியதாகவும் தெரிய வந்தது.

சாட்சிகள் தாமஸ், மரிய சூசை, வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட அளப்பங்கோடு இரப்பர் தோட்டத்தின் உரிமையாளர் சுனிதா, நடராஜன் ஆகியோரை 28.11.2023 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 16.12.2023 அன்று சாட்சி அண்ணாதுரையை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். உரக்கடை நடராஜனிடமிருந்து விஷம் விற்றதற்கான பில் எதையும் கைப்பற்றவில்லையா என்றால் அவர் பில் கொடுக்கும் வழக்கம் இல்லை என கூறிவிட்டார்.

வழக்கின் முதல் தகவல் அறிக்கை துரித தபால் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய சிறப்பு உதவி ஆய்வாளர் ஜாண் பர்னபாஸ்ஸை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

கைப்பற்றப்பட்ட தடயங்களை நீதிமன்றம் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்து தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தேன். என்னிடம் காட்டப்படும் படிவம் 95 மூலம் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அது அ.சா.ஆ. 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறி

எடுத்துக் கொடுக்கப்பட்ட வழக்குச் சொத்துக்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த படிவம் 95 என்னிடம் காட்டப்படுவதுதான். **அது அ.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரேத பரிசோதனை முடிந்து ஆஜர்படுத்தப்பட்ட வழக்குச் சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த படிவம் 95 என்னிடம் காட்டப்படுவதுதான். **அது அ.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 04.01.2024 அன்று நான் பணிமாறுதல் பெற்று சென்றுவிட்டேன். எனக்கு பிறகு வந்த ஆய்வாளர் சுப்புலெட்சுமியிடம் மேல் விசாரணைக்கு ஒப்படைத்து விட்டேன். என்னுடைய பிரேத விசாரணையில் இறந்து போன நபர் கழுத்தில் நைலான் கயிறு வைத்து சுருக்குப்போட்டதினாலும், தலையில் ஆணிபிடுங்கும் சுத்தியலால் அடித்து ஏற்பட்ட காயத்தினாலும் இறந்திருக்க கூடும் என உறுதி செய்தேன்.

மதிய உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**

இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு முதன் முதலாக எப்போது தெரிய வந்தது என்றால் அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு தெரிய வந்தது. அந்த சமயத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் களியக்காவிளை காவல் நிலைய குற்ற எண். 248/2023 சட்டபிரிவு 304 A IPC வழக்கு விசாரணை சம்பந்தமாக களியக்காவிளையில் இருந்தேன். அதற்கு முன்பாக இப்படி ஒரு சம்பவம் நடந்ததாக எந்த ஒரு தகவலும் கிடைக்கவில்லையா என்றால் கிடைக்கவில்லை. சம்பவம் குறித்து தகவல் கிடைத்து எவ்வளவு நேரத்தில் சம்பவம் இடம் சென்றேன் என்றால் மாலை சுமார் 5.00 மணிக்கு சென்றேன். நேராக சம்பவ இடத்திற்குதான் சென்றேனா

என்றால் இல்லை, பளுகல் காவல் நிலையம் சென்று முதல் தகவல் அறிக்கையை பெற்றுக் கொண்டு சம்பவ இடம் சென்றேன். நான் சம்பவ இடம் சென்று, சம்பவ இடத்தை பார்வையிட்ட பிறகு தான் எனது விசாரணையை தொடங்கினேனா என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கு சென்றவுடன் நான் முதன் முதலாக செய்த காரியம் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தததுதானா என்றால் ஆமாம். நான் சம்பவ இடம் சென்ற பிறகுதான் இந்த வழக்கின் தன்மை என்னவென்று எனக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல, முதல் தகவல் அறிக்கை பார்த்தவுடனே தெரிய வந்தது. முதல் தகவல் அறிக்கை வாங்கி எவ்வளவு நேரத்தில் சம்பவ இடம் போயிருப்பேன் என்றால் 15 நிமிடத்தில் போயிருப்பேன். சம்பவ இடத்திற்கு போகும்போது அங்கே வெளியே மக்கள் கூட்டம் இருந்ததா என்றால் அதுபோல கூட்டம் எதுவும் இல்லை. புகார்தாரரும், அவருடைய மகனும் அங்கே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பாக காவல் துறையினர் யாரும் அங்கு போகவில்லையா என்றால் போகவில்லை. நான் சம்பவ இடம் போனபிறகு சம்பவ இடத்தை பார்த்துவிட்டு உயர்அதிகாரிகளுக்கு தகவல் எதுவும் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். அவர்கள் யாரும் சம்பவ இடம் வந்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு போகும்போது அந்த வீட்டின் கதவு அடைக்கப்பட்டிருந்ததாக எந்த ஒரு சாட்சியும் என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான். பளுகல் காவல் நிலையம் சென்றபோது அன்றைய தினம் புகாரின் அசலை பார்த்தேனா என்றால் இல்லை. நான் பளுகல் காவல் நிலையத்திற்கு செல்வதற்கு முன்பாகவே

முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரின் அசல் காவல் நிலையத்தில் இல்லையா என்றால் இல்லை.

அ.சா.ஆ.1 புகார்தாரரின் கையொப்பத்திற்கு மேலே எழுதப்பட்ட சங்கதிகள் இடைச்சொருகலாக கையொப்பம் பெற்றபிறகு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று பார்வை மகஜர், வரைபடம் தயாரித்த பிறகு முதன் முதலாக யாரை விசாரித்தேன் என்றால் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்தேன். எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் மாலை 7.00 மணிக்கு விசாரித்தேன். அவர்களுக்கு பிறகு யாரை விசாரித்தேன் என்றால் புகார்தாரர் ஜெயராணியை விசாரித்தேன். ஜெயராணியை விசாரிக்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 7.45 மணி இருக்கும். நான் சம்பவ இடத்தில் எத்தனை மணி வரைக்கு இருந்தேன் என்றால் இரவு 9.00 மணி வரையில் சம்பவ இடத்தில் இருந்தேன். அதுவரை யார் யார் என்னுடன் இருந்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் மற்றும் என்னுடைய காவல் டிரைவர் ஆகியோர் இருந்தார்கள். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் காலை 10.45 மணிக்கு நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்திற்கு பகல் 12.30 மணிக்கு தகவல் கிடைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பகல் 12.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தும், மாலை 4.30 மணிக்குதான் அந்த காவல் நிலையத்தின் அதிகாரியான எனக்கு தகவல் கிடைத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

அ.சா.ஆ.1புகாரை காவல் நிலையத்தில் மதியம் 2.30 மணிக்கு பெற்றதாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நேரத்திலிருந்து புகார் பெறப்பட்டதாக சொல்லும் நேரம் வரையில் 4 மணி நேரம் இடைவெளி உள்ளது என்றால் சரிதான். மோப்ப நாய் வரவழைக்கப்பட்டதாகவும், தடய அறிவியல் அதிகாரி வரவழைக்கப்பட்டதாகவும், கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டதாகவும், என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சாதாரணமாக இவர்கள் அனைவரும் துப்பு துலங்காத வழக்கிற்கு வரவழைக்கப்படுவார்கள் என்றால் சரியல்ல, துப்பு துலக்குவதற்காக வருவார்கள். எல்லா கொலை வழக்குகளிலும் இவர்கள் வரமாட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த அதிகாரிகளை எத்தனை மணிக்கு நான் கூப்பிட்டேன் என்றால் எனக்கு தகவல் கிடைத்தவுடனேயே கூப்பிட்டு விட்டேன். சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பே கூப்பிட்டுவிட்டேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு அவர்களை சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பே கூப்பிட்டுவிட்டேன் என்று இந்த வழக்கில் எந்த சாட்சியும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, வழக்கு கோப்பில் பதிவு செய்துள்ளேன். மோப்ப நாய், கைரேகை நிபுணர்கள் மற்றும் தடய அறிவியல் அதிகாரிகள் அனைவரும் மதியம் 1.00 மணிக்கே சம்பவ இடம் வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எத்தனை மணிக்கு எதிரி சம்பவ இடத்திற்கு அன்றைய தினம் முதன் முதலாக வந்ததாக பார்த்ததாக கூறிய எந்த சாட்சியையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். காலை 10.30 மணிக்கு எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய வீட்டிற்கு சென்றதை பார்த்ததாக கூறிய எந்த சாட்சியையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் எனக்கு பிறகு வந்த விசாரணை அதிகாரியிடம் காலை

8.30 மணிக்கு முதன் முதலாக எதிரி வீட்டிற்கு வந்து பணம் கேட்டதாக அ.சா. 2 ஜேம்ஸ் கூறியுள்ளார்.

அ.சா. 1 மற்றும் 2 ஐ தவிர வேறு எந்த சாட்சியும் எனக்கு பிறகு வந்த விசாரணை அதிகாரியிடம் கூட எதிரி 8.30 மணிக்கோ அல்லது 10.30 மணிக்கோ வந்ததை பார்த்ததாக கூறவில்லை என்றால் சரிதான். காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணிக்குள் எதிரி எங்கிருந்தார் என்ற விவரமும் எங்களது விசாரணையில் கூறப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியுள்ளார். அதை தவிர வேறு எந்த சாட்சியும் சொல்லவில்லை என்றால் சரிதான். காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணிக்குள் எதிரியை யாரும் பார்த்ததாகவும், எந்த சாட்சியும் இல்லை என்றால் சரிதான். எதிரி சம்பவ இடத்திற்கு காலை 8.30 மணிக்கு வந்ததாக சொல்வதையோ, திரும்பி போனதாக சொல்வதையும், வாகனத்தை எந்த இடத்தில் வைத்திருந்தார் என்பதையோ பார்த்ததாக எந்த ஒரு சாட்சியும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் அ.சா. 1 மற்றும் 2 காலை எத்தனை மணிக்கு கோவிலுக்கு போனார்கள் என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளார்கள். அ.சா. 1 மற்றும் அ.சா. 2 கோவிலுக்கு சென்றதையோ, கோவிலிருந்து வந்ததையோ எந்த ஒரு சாட்சியும் பார்த்ததாக கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணையின் போது அ.சா. 1 மற்றும் 2 ம் கோவிலில் எந்த இடத்தில் இருந்தோம் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா. 2 ன் மனைவி சம்பவத்திற்கு பிறகு கோவிலிருந்து வந்தார்களா, எப்போது வந்தார்கள், அவர்களுக்கு எப்போது தகவல் கிடைத்தது போன்ற விவரங்கள் எதுவும்

என்னுடைய விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அவரை நான் இந்த வழக்கில் சாட்சியாகவும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 ஜெயராணி என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் தான் உணவு உண்ணாமலும், மருந்து எடுத்துக் கொள்ளாமலும் கோவிலுக்கு அன்று காலை சென்றதாக கூறவில்லை என்றால் அவ்வாறு சொல்லவில்லை. ஆனால் சுமார் காலை 10.45 மணிக்கு மாத்திரை சாப்பிடுவதற்காக வீட்டிற்கு சென்றோம் என கூறியுள்ளார். அ.சா.1 தனது மகனான அ.சா. 2 ஜெகன் ஜேம்ஸ் குழந்தையுடன் கோவிலுக்கு வெளியே இருந்ததாகவும், குழந்தையை கொண்டுபோய் தனது மனைவியிடம் கொடுத்துவிட்டு வந்ததாகவும் என்னுடைய விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 மற்றும் 2 வீட்டிற்கு வரும்போது வீட்டின் கேட்டும், வீட்டின் கதவும் திறந்திருந்ததாகவும், என்னுடைய விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரி வலது கையில் கையுறை போட்டிருந்ததாக புகாரிலோ, என்னுடைய விசாரணையின்போதோ அ.சா.1 மற்றும் அ.சா. 2 சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி பயன்படுத்தியதாக சொல்லக்கூடிய சுத்தியல் சம்பவத்திற்கு முன்பாக எங்கிருந்தது என்றும், அ.சா.1 மற்றும் அ.சா. 2 சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரியை அ.சா. 2 துரத்தி சென்றதாகவும் அ.சா. 1 மற்றும் அ.சா. 2 என்னிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி எடுத்து சென்றதாக சொல்லும் நகையும், பணமும் எப்படி எடுத்துச் சென்றார் என்றும் அ.சா.1 மற்றும் அ.சா. 2 என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் எடுத்துக் கொண்டு தப்பி சென்றுவிட்டதாக சொல்லியுள்ளார்கள். எப்படி எடுத்து

சென்றார் என்று சொல்லவில்லை. எதிரி பிளாஸ்டிக் கவரில் அவற்றை எடுத்து சென்றதாகவும் எதிரியின் பேண்டின் பின்பகுதியில் சொருகி கொண்டு ஓடியதாகவோ அ.சா. 1 மற்றும் அ.சா. 2 என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 மற்றும் அ.சா. 2 என்னுடைய விசாரணையிலோ அ.சா. ஆ 1 புகாரிலோ நைலான் கயிறு ஒன்று சம்பவ இடத்தில் இருந்ததாகவோ அதை எதிரி எடுத்துச் சென்றதாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 மற்றும் அ.சா. 2 ம் வீட்டிற்குசென்றபோது இறந்துபோன ஜேம்ஸ் உயிருடன் இருந்தார் என்றோ அவர் சத்தம் எதுவும் போட்டார் என்றோ என்னுடைய விசாரணையின்போது அ.சா. 1 மற்றும் அ.சா. 2 சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்துபோன ஜேம்ஸின் உடம்பிலிருந்தோ, தலையிலிருந்தோ, முகத்திலிருந்தோ இரத்தம் வடிந்து கொண்டிருந்ததாக எந்த ஒரு சாட்சியும் என்னுடைய விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த ஒரு சாட்சியும் அவரின் உடலில் இரத்தத்தை துடைத்ததாகவோ அவருக்கு கட்டு போட்டதாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் வீட்டிலிருந்து வெளியே செல்வதற்கு ஒரே ஒரு வாசல் வடக்கு பார்த்து இருப்பதாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வாசல் வழியாக உள்ளே வந்து வீட்டிற்கு இருக்கும் இரண்டு அறைகளுக்கு செல்வதற்கு வாசல் இருப்பதாக வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபிறகு எதிரி எப்படி வீட்டை விட்டு எந்த வழியாக வெளியே போனார் என்று எந்த ஒரு சாட்சியும் என்னுடைய விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி

வீட்டை சுற்றி ஓடியதாகவும், எந்த ஒரு சாட்சியும் என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லும் வீட்டில் இருந்த பணத்தை கட்டிலில் உள்ள டிரையரை உடைத்து எடுத்ததை பார்த்தாகவோ அல்லது இறந்துபோன நபர் அணிந்திருந்த நகைகளை கழற்றியதை பார்த்ததாகவோ எந்த ஒரு சாட்சியும் என்னுடைய விசாரணையின் போது கூறவில்லை என்றால் சரிதான். கையில் வைத்திருந்ததைதான் பார்த்துள்ளார்கள்.

ஜேம்ஸ் இறந்தபிறகு அவை எடுக்கப்பட்டதா அல்லது அதற்கு முன்பு எடுக்கப்பட்டதா என்று என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் தெரியவரவில்லை. இறந்துபோனவரின் வாயில் விஷத்தன்மையுடன் கூடிய எச்சில் படிந்திருந்ததாகவோ அவருடைய கழுத்தில் கயிற்றால் இறுக்கிய காயம் இருந்ததாகவோ அ.சா. ஆ 1 புகாரிலோ அல்லது அ.சா. 1 மற்றும் அ.சா. 2 என்னுடைய விசாரணையின்போதோ கூறவில்லை என்றால் சரிதான். எனக்கு பிறகு விசாரணை செய்த அதிகாரியிடம் கூறியுள்ளார்கள். எதிரி கருநீல கலர் பேண்ட் போட்டிருந்ததாகவோ, பிங் கலர் சட்டை அணிந்திருந்ததாகவோ அ.சா. 1 மற்றும் அ.சா. 2 என்னுடைய விசாரணையிலோ அல்லது அ.சா.ஆ. 1 புகாரிலோ கூறவில்லை என்றால் சரிதான். எதிரி பயன்படுத்தியதாக சொல்லும் பேண்டிலோ, சர்ட்டிலோ பாக்கெட் இருந்ததாக சாட்சிகள் யாரும் என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 சட்டை இதுவரையில்

பயன்படுத்தவேபடாத ஒன்று என்றாலும் அதை இந்த வழக்கிற்காக வாங்கி ஜோடித்துள்ளோம் என்றாலும் சரியல்ல. இந்த சட்டை தற்போதும் புதிய சட்டையின் வாடையுடன்தான் உள்ளது என்றால் சரியல்ல. அ.சா. 1 மற்றும் அ.சா. 2 எதிரியின் உடையில் இரத்தம் பட்டிருந்ததாக என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றியதாக சொல்லும் பொருட்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக அ.சா.ஆ. 1 புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் சா.பொ. 9 சுத்தியல் இதுவரையில் பயன்படுத்தப்படாத சுத்தியல் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சா.பொ. 9 சுத்தியலின் கைப்பிடியும், சா.பொ. 10 இரும்பு கம்பியும் ஒரே விட்டமுடையது என்றால் சரிதான். இரண்டும் ஒரே உலோகம் என்றால் சரியல்ல. ஒரே கம்பியை எடுத்து சா.பொ. 9 சுத்தியலுக்கு கைப்பிடியும் சா.பொ. 10 இரும்பு கம்பியும் என்னால் ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சா.பொ. 9 ன் கைப்பிடியும், அந்த சுத்தியலும் இணக்கமாக பொருந்தக்கூடியது அல்ல என்றாலும் இந்த வழக்கிற்காக நான் தயார் செய்தது என்றாலும் சரியல்ல. நான் கைப்பற்றியதாக சொல்லும் சா.பொ. 9 சுத்தியல், சா.பொ. 8 நைலான் கயிறு, சா.பொ. 21 கையுறை சா.பொ. 19 சிமெண்ட் துண்டுகள் மற்றும் இரத்தம் தோய்த்து எடுத்ததாக சொல்லும் பஞ்சு ஆகியவற்றில் இரத்தம் இல்லை என தடய அறிவியல் ஆய்வகத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இரத்தம் எந்த வகை என சொல்ல முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சில் காணப்பட்ட இரத்தத்தின் வகையும் சொல்ல

இயலவில்லை என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மேற்குறிப்பிடப்பட்ட பொருட்களில் காணப்பட்டதாக சொல்லப்படும் இரத்தம் இறந்து போனவரின் இரத்தம் என்று சொல்ல முடியாது என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா. 2 சம்பவ இடத்தில் ஒரு மது பாட்டில் இருந்ததாகவோ அதை முகர்ந்து பார்த்தபோது விஷம் கலந்திருந்ததாகவோ அல்லது எதிரி அந்த விஷம் கலந்த மது பாட்டிலில் இருந்ததை இறந்து போனவரின் வாயில் ஊற்றியதை பார்த்ததாகவோ அதை அவர் துப்பியதாகவோ அவ்வாறு துப்பியது அவரது வாயை சுற்றி இருந்ததாகவோ என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தயார் செய்ததாக சொல்லும் வரைபடத்தில் சம்பவ இடத்தில் விஷ பாட்டில் இருந்ததாக காண்பிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அந்த விஷ பாட்டிலை சீல் போட்டு கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

வரைபடத்தில் சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லும் துணி காய போடும் கொடி எதுவும் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு எந்த கொடியும் இல்லை. அங்கு கொடி இருந்தது என்றாலும் இல்லை என சொல்வதிலிருந்தே நான் சம்பவ இடம் போகவே இல்லை என தெரிய வருகிறது என்றாலும் சரியல்ல.

தடய அறிவியல் அதிகாரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அறைக்கு பின்னே இருந்த படுக்கை அறையிலிருந்து இரத்தம் மாதிரி எடுத்ததாகவும், என்னிடம் விசாரணையில் யாரும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம்

நடந்ததாக சொல்லப்படும் அறையை தவிர வீட்டில் இருக்கும் மற்ற இரண்டு அறைகளில் கட்டில்கள் இருந்ததாக வரைபடத்தில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அதில் ஒரு கட்டிலிலிருந்த ஒரு டிரையர் உடைக்கப்பட்டதாகதான் வரைபடத்தில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அ.சா. 1 மற்றும் அ.சா. 2 சென்றதாக சொல்லும் சர்ச்சையோ அ.சா. 3 வண்டி நிறுத்தக்கூடியதாக சொல்லப்படும் ஆட்டோ ஸ்டாண்டோயோ நான் வரைபடத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி தப்பி செல்லும் வழியில் பொதுமக்களை மிரட்டியதாகவும், பொதுமக்கள் அலறியடித்து ஓடியதாகவும், எந்த ஒரு சாட்சியும் என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான்.

இறந்த ஜேம்ஸ்ஸை அ.சா.1, 2 மற்றும் அ.சா. 4 ஆகியோர் அ.சா. 3 ன் ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு சென்றதாக சாட்சிகள் என்னுடைய விசாரணையின்போது கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். சுதிர் என்ற சாட்சியும், அ.சா. 1, அ.சா. 2, அ.சா. 3 மற்றும் அ.சா. 4 ஆகியோர் சேர்ந்து இறந்துபோன ஜேம்ஸ்ஸை ஆட்டோவில் தூக்கி வைத்து மருத்துவமனைக்கு சென்றதாக சாட்சிகள் என்னுடைய விசாரணையின்போது கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீடு வரையில் ஆட்டோவை கொண்டு சென்று, அவ்வாறு ஏற்றி சென்றதாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான்.

அ.சா. 3 அருள்ஜோஸும், சுதிரும் சத்தம் கேட்டு வீட்டிற்குள் சென்று பார்க்கும்போது ஜேம்ஸ் வீட்டின் முன் அறையில் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும், உடனே அ.சா. 3 ஓடி வந்து அவரின் ஆட்டோவை கொண்டு வந்து

அதன்பிறகு அவ்வாறு கூட்டிச் சென்றதாக சாட்சிகள் என்னுடைய விசாரணையின் போது கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா. 1, 2, 3, 4 மற்றும் சுதிரும் அவ்வாறு இறந்த ஜேம்ஸ்ஸை தூக்கி ஆட்டோவில் வைத்து மருத்துவமனைக்கு சென்றபோது அவருடைய உடையில் இரத்தம்பட்டதாக என்னிடம் சொல்லவும் இல்லை, அவர்களின் உடைகளை நான் கைப்பற்றவும் இல்லை என்றால் சரிதான்.

சம்பவ இடத்திற்கு 108 ஆம்புலன்ஸ் வந்ததாக இந்த வழக்கில் விசாரணையில் எந்த சாட்சியும் சொல்லியுள்ளதா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகே உள்ள இருதயம் மருத்துவமனைக்கோ, குழித்துறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இருக்கக் கூடிய வேறு எந்த ஒரு மருத்துவமனைக்கோ இறந்து போன ஜேம்ஸ்ஸை கூட்டிச் சென்று காண்பித்ததாக எந்த ஒரு சாட்சியும் என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நான் குழித்துறை அரசு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால இல்லை. எந்த சாட்சியாவது அங்கு வைத்து அன்றைய தினம் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் சம்பவ நடந்த அன்றே மதியம் குழித்துறை அரசு மருத்துவமனைக்கு போனேன் என்றாலும் அங்கு வைத்து சாட்சிகளை விசாரணை செய்தேன் என்றாலும் சரியல்ல. குழித்துறை அரசு மருத்துவமனையில் இறந்துபோன ஜேம்ஸ்ஸை பரிசோதனை செய்ததாக எந்த ஒரு டாக்டரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் குழித்துறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது ஜேம்ஸின் உடல் விரைத்து போயிருந்ததா அல்லது இரத்தம் எதுவும் வடிந்து கொண்டிருந்ததா,

உறைந்து காணப்பட்டதா என்ற விவரம் எதுவும் தெரியாது என்றால் சரிதான். ஜேம்ஸ் இறந்து போன பல மணி நேரம் கழித்து விரைத்து போன உடலைதான் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றாலும் அதனால்தான் அவ்வாறு எந்த ஒரு மருத்துவரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன ஜேம்ஸ் அந்த கால கட்டத்தில் எதாவது மருத்துவம் செய்து கொண்டிருந்தாரா என்ற கோணத்தில் நான் விசாரணை எதுவும் செய்யவில்லை என்றால் மருத்துவர் யாரையும் நான் விசாரிக்கவில்லை. ஆனால் புகார்தாரர் தனது புகாரிலும், வாக்குமூலத்திலும் இறந்துபோன நபர் செய்து கொண்டிருந்த மருத்துவர் குறித்து கூறியுள்ளார். அவ்வாறு கூறியுள்ளவிவரம் உண்மைதானா என தெரிந்து கொள்வதற்கு அதில் குறிப்பிட்டிருந்த P.P.K. மருத்துவமனையின் மருத்துவர்களை விசாரிக்கவும் இல்லை, அந்த மருத்துவமனையிலிருந்து ஆவணம் எதையும் பெற்று பார்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் இறந்த ஜேம்ஸ்ஸிற்கு காலில் காயம் இருந்ததா அல்லது அவருக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்பட்டிருந்ததா என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடைய பிரேத விசாரணை அறிக்கையிலும் இறந்துபோன ஜேம்ஸிற்கு காலில் காயம் இருந்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவருடைய காலில் துணி சுற்றப்பட்டிருந்ததாகவும், பிரேத விசாரணை அறிக்கையில் நான் கூறவில்லை என்றால் சரிதான். அவ்வாறு எதுவும் துணி சுற்றப்பட்டிருந்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. என்னுடைய பிரேத விசாரணை அறிக்கையில் சா.பொ. 18 வெள்ளை மற்றும் கருநீல கலரில் சிறு சிறு கட்டம் போட்ட லுங்கியை இறந்துபோன

ஜேம்ஸின் உடலில் சுற்றப்பட்டிருந்தது என்றும் கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரேத விசாரணையின்போது அந்த லுங்கி அவருடைய உடலில் இல்லை என்றாலும் அது பிற்பாடு இந்த வழக்கிற்காக நான் ஜோடித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

எதிரியின் வீட்டிற்கு நாங்கள் எந்த வழியாக வந்தோம் என்றால் எதிரியின் வீட்டிற்கு முன் வடக்கு தெற்காக ஒரு ரோடு உள்ளது, அதில் வடக்கிலிருந்து வந்தோம். அந்த இடத்தை குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது என்றால் காணாங்குளம் ரோட்டிலிருந்து வந்தோம். எதிரி அளப்பங்கோட்டில் மறைந்திருந்து, பிறகு தனது வீட்டிற்கு வரும் வழியில் நாங்கள் கைது செய்ததாக சொன்னால் அது சரியா என்றால் சரியல்ல, அவரது வீட்டில் வைத்துதான் கைது செய்தோம். எதிரியை முதல் முதலாக அவருடைய வீட்டில் வைத்துதான் பார்த்தேன் என்றால் ஆமாம். அப்போது வீட்டில் வேறு யாரும் இருந்தார்களா என்றால் இல்லை, அவர் மட்டும்தான் இருந்தார். எதிரி சம்பவ சமயத்தில் உடுத்தியிருந்ததாக சொல்லும் உடைகள், நைலான் கயிறு, திருடியதாக சொல்லகூடிய பணம் ஆகியவற்றை எதிரியின் வீட்டில் எந்த இடத்திலிருந்து எதிரி ஆஜர்ப்படுத்தி நான் கைப்பற்றினேன் என நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் நகைகளை புதைத்து வைத்திருத்ததாக சொல்லும் நிலம் எந்த கிராமத்தில், எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்பது குறித்து நான் எந்த விவரமும் சேகரிக்கவில்லை என்றால் சரிதான். சா.பொ. 23 பிளாஸ்டிக் டப்பாவில் மண்ணில் புதைத்து வைத்திருந்ததாகவோ, அது மண் பட்டிருந்ததாகவோ எந்த ஒரு தடயமும்

இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கு சுமார் 30 மணி நேரத்திற்கு பிறகுதான் எதிரியை கைது செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 30 மணி நேரம் எதிரி எங்கு இருந்தார் என்பது எங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது, தேடிக் கொண்டிருந்தோம், கைது செய்யும்போது வீட்டில் இருந்தார். அதுவரையில் அவர் எங்கிருந்தார் என்று எந்த ஒரு சாட்சியும் என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை.

இரத்தம் படிந்ததாக சொல்லக்கூடிய ஆடைகளும், நைலான் கயிறும், பணமும் வீட்டில் வைத்திருந்தார் என்றும், விலை மதிப்பு மிகுந்த நகைகளை எங்கேயோ புதைத்து வைத்திருந்தார் என்றும் நான் சொல்லவது நம்பக்கூடியதாக இல்லை என்றால் சரியல்ல. நகையை கைப்பற்றியதாக சொல்லும் சமயத்தில் அவற்றை எடை போட்டு பார்த்தோமா என்றால் இல்லை. எதிரி திருடி சென்றதாக சொல்லும் ரொக்கத்தின் வரிசை எண்களை புகாரிலோ, என்னுடைய விசாரணையின்போதோ அ.சா. 1 மற்றும் அ.சா. 2 கூறியுள்ளார்களா என்றால் இல்லை. அந்த ரொக்கத்தை வழக்கிற்காக நான் ஜோடித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியையோ கைப்பற்றியதாக சொல்லும் வழக்கு சொத்தையோ அ.சா.1மற்றும் அ.சா. 2 ஐ கூப்பிட்டு அவர்கள் அடையாளம் காண்ப்பித்தார்கள் என்று வழக்கில் எந்த ஒரு சாட்சியும் கிடையாது என்றாலும் வழக்கு கோப்பிலும் அவ்வாறு ஒரு விஷயம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு நாட்குறிப்பில் சொல்லியுள்ளேன். அ.சா.1மற்றும் அ.சா. 2 இந்த நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தை படித்துவிட்டு, குறைப்பாடுகளை நீக்குவதற்காக இவ்வாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. இறந்துபோன ஜேம்ஸ் வட்டிக்கு பணம் கொடுக்கும் வழக்கமுடையவரா என்றும் நான் என்னுடைய விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அவர் அவ்வாறு வட்டிக்கு பணம் கொடுக்க கூடிய நிலையில் உள்ளவரா என்றும்நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

ஜேம்ஸிற்கும், எதிரிக்கும் எந்த வகையில் தொடர்பு என்றோ, அவர்கள் உறவினர்களா என்றோ நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல, அவர்களுக்கிடையே நட்பு ரீதியாக பழக்கம் இருந்ததாக தெரிந்து கொண்டேன். அவர்களுக்கிடையே நட்பு இருந்ததாக எந்த ஒரு சாட்சியும் என்னுடைய விசாரணையின்போது கூறவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு எதிரி ஜேம்ஸிடம் வந்து பணம் கேட்டார் என்றும் புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எதிரியின் இரு சக்கர வாகனம் என்று கூறி நான் கைப்பற்றியுள்ள இரு சக்கர வாகனத்தை எந்த இடத்தில் வைத்து கைப்பற்றினேன் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வீட்டிலிருந்து கைப்பற்றியதாக சொல்லியுள்ளேன். அந்த இரு சக்கர வாகனம் எதிரியின் பெயரில் உள்ள வாகனம் கிடையாது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதன் ஆர்.சி. புத்தகம் எதையும் பார்த்தேனா என்றால் இல்லை. அந்த வாகனத்தின் பதிவு எண், இன்ஜின் எண், Chassis எண் ஆகியவற்றை எந்த வித அடிப்படையும் இல்லாமல் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, வண்டியில் இருந்ததை பார்த்ததை சொன்னேன். அந்த வண்டியின் உரிமையாளர் யார் என்று எனக்கு

தெரியாது என்றால் சரிதான். அந்த வாகனம் எதிரிக்கு சொந்தமானது என்றாலும் அதை அவருடைய வீட்டிலிருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் எங்கள் காவல் நிலையத்தில் வைத்திருந்த வேறு ஒரு வழக்கிற்கு சம்பந்தப்பட்ட வாகனத்தை இந்த வழக்கில் ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வாகனத்தை எதிரி இந்த நீதிமன்றத்திலிருந்து மனு எதுவும் தாக்கல் செய்து பெற்றுச் செல்லவும் இல்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் பதிவு செய்ததாக சொல்லும் வாக்குமூலங்கள், தயார் செய்ததாக சொல்லும் ஆவணங்கள் ஆகியவற்றை லேப்டாப்பில் டைப் செய்ததாகவோ அதை வெளியே கொடுத்து பிரிண்ட்அவுட் எடுத்ததாகவோ வழக்கில் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இவை அனைத்துமே எங்கள் காவல் நிலையத்தில் வைத்து பிற்பாடு வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள நேரத்திலோ, தேதியிலோ, இடத்திலோ அவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் பதிவு செய்ததாக சொல்லப்படும் பெரும்பாலான வாக்குமூலங்கள் 27.11.2023 என்று எழுதப்பட்டு, பிற்பாடு 26.11.2023 என திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை சம்பவ தினத்தன்று மாலை 4.00 மணிக்கு நீதிமன்றத்தில் கொண்டு சென்று விரைவு தபால் மூலம் கொடுத்ததாக என்னுடைய விசாரணையின்போது சாட்சி கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

4.00 மணிக்கு காவல் நிலையத்தில் வாங்கியதாக சொல்லியுள்ளார். எத்தனை மணிக்கு கொடுத்தார் என சொல்லவில்லை. அவருடைய வாக்குமூலத்தில் துரித தபாலை 4.00 மணிக்கு பெற்று விட்டு உடனே நிலையத்திலிருந்து புறப்பட்டு

குழித்துறை குற்றவியல் நடுவர் எண். 1 நீதிமன்றத்திற்கு சென்று வழக்கின் அசல்களை குழித்துறை குற்றவியல் நடுவர் எண். 1 அவர்களிடமும், அதன் நகல்களை தக்கலை உட்கோட்ட காவல் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் நாகர்கோவில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் ஒப்படைத்து நிலையம் வந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கும், எதிரிக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. இறந்துபோன ஜேம்ஸ் இறப்பதற்கு 2 மாதங்கள் முன்பிலிருந்தே தனது வீட்டிற்குள்ளேயே படுக்கையில் இருந்ததாகதான் என்னுடைய விசாரணையில் தெரிய வந்தது என்றால் சரியல்ல. வீட்டில் இருந்தார், படுக்கையிலேயே இருக்கவில்லை. அவர் நல்ல திடகாத்திரமான உடல்வாகுடன்தான் இருந்தார் என்றால் சரிதான்.

அவர் வீட்டில் மர்மமான முறையில் இறந்துகிடந்தார் என்றும் பல மணி நேரம் தாண்டிதான் கோவிலுக்கு போயிருந்த அவருடைய மனைவி அங்கிருந்த நிகழ்வுகள் அனைத்தும் வீட்டிற்கு வந்தபோதுதான் தெரிந்து கொண்டு, அவர் எப்படி இறந்தார் என தெரியாமலேயே சந்தேகத்தின் அடிப்படையில் தகவல் தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த சந்தேகத்தின் அடிப்படையில் நான் மதியம் சுமார் 12.00 மணியிலிருந்து மாலை வரையில் மோப்ப நாய், தடய அறிவியல் நிபுணர்கள், கைரேகை நிபுணர்கள் ஆகியோரை வரவழைத்து விசாரணைகள் மேற்கொண்டு குற்றவாளி யார் என்பதை என்னால் கண்டுபிடிக்கமுடியவில்லை என்றால் சரியல்ல. அதன்பிறகு தவறான தகவலின் அடிப்படையில் காவல்

நிலையத்தில் வைத்து என்னால் அ.சா.ஆ 1 புகார் பொய்யாக என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. புகாரை எழுதிய நபரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 1 புகார் எங்கள் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டதால்தான் அதை யார் எழுதியது என்பதை இந்த வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன ஜேம்ஸின் சகோதரர் வின்சென்ட் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான்.

எதிரி மருதங்கோட்டில் இருக்கக்கூடிய சி.எஸ்.ஐ சர்ச்சின் உறுப்பினர் என்றால் சரிதான். அந்த சர்ச்சின் கட்டுமானத்தை எதிரி காண்டிராக்டராக இருந்து கட்டி முடித்தவர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிரிக்கும், அந்த சர்ச்சின் அங்கமான பாபு என்பவருக்கும் அந்த சி.எஸ்.ஐ. சர்ச்சில் நடக்கும் போட்டிகளில் சம்பந்தமாக முன் விரோதம் இருந்து வந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த பாபு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதியை சேர்ந்தவர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கில் துப்பு துலங்காமல் இருந்தபோது அந்த பாபுவின் ஏற்பாட்டின் பேரில் இந்த எதிரி மீது புகாரை ஜோடித்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த எதிரி மீது இந்த வழக்கு தவிர வேறு எந்த வழக்கோ, புகாரோ இருந்ததில்லை என்றால் என்னுடைய விசாரணையில் அவ்வாறு எதுவும் தெரியவரவில்லை.

உதவி ஆய்வாளர் முத்துக்குமரன் நான் சம்பவ இடத்திற்கு விசாரணைக்கு செல்வதற்கு முன்பாகவே அவர் சம்பவ இடத்திற்கு சென்ற

விவரத்தை என்னுடைய விசாரணையின்போது சொன்னாரா என்றால் இல்லை. புகார் தயார் செய்யப்பட்டதும், முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டதும் 26.11.2023 அன்று இரவு 9.00 மணிக்கு பிற்பாடுதான் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றாலும் நான் எந்த ஒரு விசாரணையும் செய்யவில்லை என்றாலும் இறந்துபோனவர் எப்படி இறந்தார் என்றும் என்னுடைய விசாரணையின்போது துலங்க வில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சியமாக சேர்த்துள்ள தாஸ் என்பவர் பெயரில் பல குற்ற வழக்குகள் உள்ளது என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்ல முடியும். இறந்துபோன நபரின் உறவினர்களையும் அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களை மட்டும்தான் சாட்சியமாக காண்பித்துள்ளேன் என்றாலும் மூன்றாம் நபர்கள் யாரையும் சாட்சியமாக காட்டவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ. 1 புகாருக்கும், நான் விசாரித்தாக சொல்லும் சாட்சியங்களின் வாக்குமூலத்திற்கும், நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்திற்கும் இடையே பல முரண்பாடுகள் உள்ளது என்றாலும் சரியல்ல. இறந்துபோனவரின் சகோதரர் உதவி ஆய்வாளர் வின்சென்டிற்காக அவசரகதியில் விசாரணை முறையாக செய்யாமல் எதிரி மீது வழக்கை ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல.

இறந்த நபர் காலில் ஏற்பட்ட காயம் தீராததினால் அவர் தற்கொலை செய்து கொள்வதற்கு பல்வேறு முயற்சிகள் செய்தார் என்றாலும் அதில்தான் அவர்

இறந்துபோனார் என்றாலும் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்யாமல் தவறான முடிவுக்கு வந்துள்ளேன் என்றாலும் சரியல்ல.